பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(03.05.2025 முதல் 07.05.2025 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 035 (05) PJN/GKMS/2025 தேதி: 02.05.2025

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (27.04.2025 முதல் 01.05.2025 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -07.05.2025 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27/04 | 28/04 | 29/04 | 30/04 | 01/05 | | நாள்-1 03/05 | நாள்-2 04/05 | நாள்-3 05/05 | நாள்-4 06/05 | நாள்-5 07/05 |
| 0 | 2.0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 1 | 2 | 4 | 4 | 40 |
| 36 | 35 | 35 | 37 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 35 | 35 | 35 | 36 | 36 |
| 26 | 27 | 26 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 27 | 27 | 28 | 28 |
| 1 | 5 | 4 | 3 | 4 | மேக மூட்டம் | 5 | 5 | 5 | 6 | 6 |
| 69-86 | 78-92 | 67-86 | 58-92 | 59-86 | ஈரப்பதம் (%) | 70-75 | 70-75 | 70-75 | 75-78 | 75-78 |
| 4 | 3 | 2 | 3 | 3 | காற்றின் வேகம் (கி.மீ) | 22 | 20 | 22 | 22 | 18 |
| மேற்கு வட மேற்கு | தென் கிழக்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | காற்றின் திசை | தெற்கு தென் மேற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (03.05.2025 முதல் 07.05.2025 வரை):**

மே 03 லிருந்து 06 வரை லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

மே 07 ஆம் தேதி மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த சில நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 27-36 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-78 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 18-22 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

மே 07 லிருந்து மே 13 வரை மழை (3.6 மி.மீ) இயல்பை விட அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை (34.6 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (24.9டி.செ) இயல்பாகவும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| பொது அறிவுரை | சில இடங்களில் இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னல் எதிர்பார்க்கப்படுகிறது. பயிர்களில் பயிர்கழிவு மூடாக்கு இடுவதனால் மழையினால் கிடைத்த மண் ஈரத்தினை ஆவியாகமல் சேமிக்கலாம். | |
| பருத்தி | பயிர் வளர்ச்சி பருவம் | காரைக்கால் மாவட்டம் பகுதிகளில் கடந்த சில தினங்களாக நிலவிய வானிலையானது பருத்தியில் சாறு உருஞ்சும் பூச்சிகளான இலைப்பேன் மற்றும் அசுவினி பூச்சுகளினால் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இப்பூச்சிகளின் தாக்குதல் தென்பட்டால் சாறு |

| | | |
|---|---|---|
| | | உருஞ்சும் பூச்சிகளை கட்டுபடுத்த ஹெக்டருக்கு இமிடாக்லோபிரைட் 17.8 SL 100 மி.லி. அல்லது அசாடிராக்டின் 0.03% (300 ppm) 2500 மிலி தெளிக்கவும். |
| | | பருத்தியில் இரகங்களுக்கு 15 வது கனுவிலும், ஒட்டு செடிகளுக்கு 20 வது கனுவிலும் நுனி கிள்ளுவதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம் |
| வாழை | | முட்டுக்கொடுத்தல்/கால்வாய் அமைத்தல்: மூங்கில் கம்புகள் அல்லது கயிறுகளை முக்கோணத்தில் பயன்படுத்தி பயிர்கள் சாய்வதைத் தடுக்கவும்.<br>வடிகால் வசதியை மேம்படுத்தவும்.<br>நீர்ப்பாசனம் மற்றும் உரங்களை மழைக்கு சற்று முன்பு பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். |
| தென்னை | | தென்னை தோட்டங்களைச் சுற்றியுள்ள வடிகால் வழிகளை சுத்தம் செய்து வேர் மண்டலத்திற்கு அருகில் நீர் தேங்குவதைத் தவிர்க்கவும்.<br>காற்றினால் ஏற்படும் சேதத்தைக் குறைக்க உலர்ந்த அல்லது பலவீனமான இலைகள் மற்றும் சேதமடைந்த தேங்காய்களை அகற்றவும்.<br>ஊட்டச்சத்து இழப்பைத் தடுக்க எதிர்பார்க்கப்படும் மழைக்கு சற்று முன்பு உரமிடுவதைத் தவிர்க்கவும். |
| கால்நடை | | கனமழை பெய்யும் போது கால்நடைகளை நன்கு காற்றோட்டமான, உயர்த்தப்பட்ட தங்குமிடங்களுக்கு மாற்றவும்.<br>இடியுடன் கூடிய மழை பெய்யும் போது மரங்களுக்கு அடியில் அல்லது திறந்தவெளிகளில் விலங்குகளை கட்டுவதைத் தவிர்க்கவும்.<br>கொட்டகைகளில் கூரை, சுவர்கள் மற்றும் வடிகால் ஆகியவை நல்ல நிலையில் இருப்பதையும், மழையைத் தாங்கும் தன்மையையும் உறுதி செய்யவும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த சில நாட்களுக்கு லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

**முதல்வர்**